ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2307/24 - 2022 නොවැම්බර් මස 24 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.11.24

*2307/24 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளைச் சட்டம்

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர், கலாநிதி கெஹெலிய ரம்புக்வெல ஆகிய நான், குறித்த சபைக்கு, குருநாகல் வடக்கு நகர நீர் வழங்கல் திட்டத்தின், அரன்கெலே நீர்க் கோபுரத்தை நிர்மாணிப்பதற்காக காணித்துண்டு ஒன்று தேவைப் பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் உரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.

கலாநிதி **கெஹெலிய ரம்புக்வெல,**
நீர் வழங்கல் அமைச்சர்.

தொடர்பு இல. DVP/02/03/KG/522
நீர் வழங்கல் அமைச்சு,
35, "லக்திய மெதுர"
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்த,
பத்தரமுல்லை.
2022, நவெம்பர் 16.


இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**உப அட்டவணை**

*வடமேல் மாகாணத்தின், குருநாகல் மாவட்டத்தில், கனேவத்த பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 440, அரன்கெலே கிராம அலுவலர் பிரிவில், மீகஹஎல கிராமத்திலமைந்த, நில அளவையாளர் நாயகத்தினால் அளந்து தயாரிக்கப்பட்ட, இறுதி கிராம வரைபட இலக்கம் 2777, மேலதிக இலக்கம் 3 இற்கு உரிய வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 98 இன் பகுதியாக குறிப்பிடப்படும் "கல்கடுல்லயாய" எனும் காணியில் கீழ்க் காணப்படும் எல்லைகளில் அமைந்த சுமார் 30 பர்ச்சஸ் அளவிலான காணித்துண்டு.*

*காணியின் எல்லைகள் :*

| | | |
|---|---|---|
| வடக்கு | : | இந்த காணியின் எஞ்சிய பகுதி; |
| கிழக்கு | : | இந்த காணியின் எஞ்சிய பகுதி; |
| தெற்கு | : | பாதை; |
| மேற்கு | : | காணித்துண்டு இலக்கம் 114. |

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :* 01. திருமதி எச். கிரிஹபு,
பன்னேஹெக்கம,
நிகதலுபொத.

EOG 11 - 0257

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.